ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

**मृद्वीकारसिता सिता समशिता स्फीतं निपीतं पयः**
**स्वर्यातेन सुधाप्यधायि बहुधा रम्भाधरः खण्डितः ।**
**सत्यं ब्रूहि मदीयजीव भवता भूयो भवे भ्राम्यता**
**रामेत्यक्षरयोरये मधुरिमोद्गारः क वास्वादितः ॥**

स्तुतिपद्धतिः ॥

அடிக்கடி ஸம்ஸாரத்தில் சுற்றுகிறவனான ஹே ஜீவனே! உன்னால் திராக்ஷக்கனி புஜிக்கப்பட்டது. உயர்ந்த ஜீனியும் ஸாப்பிடப்பட்டிருக்கின்றது. அபேக்ஷையுள்ளவரையில் க்ஷீரமும் அருந்தப்பட்டிருக்கின்றது. ஸ்வர்க்கலோகத்தையடைந்தபொழுது அமுதமும் உண்ணப்பட்டிருக்கின்றது. மற்றும் சுவைபொருந்தியதாகக் கூறப்படும் வஸ்துக்களும் உன்னால் ருசிபார்க்கப்பட்டிருக்கின்றன. எனது கேள்விக்கு உண்மையான மறுமொழியுரைக்கவேண்டும். ஹே ஜீவ, ராம என்கிற இவ்விரண்டு அக்ஷரங்களிலிருக்கும் சுவையின் ஆதிக்கமானது எந்தவஸ்துவிலாவது ஸாப்பிடப்பட்டிருக்கின்றதா ?

ஸ்ரீ ராம கிருஷ்ண சிவ என்பன நாமாக்களை ஆதியாகக்கொண்ட பகவானுடைய நாமாக்களிலிருக்கும் சுவையை நன்கறியாத சில மூடஜனங்கள் தேன் இனிது கற்கண்டு இனிது அமுதம் நற்சுவை பொருந்தியது என்று உபயோகமில்லாத பல வஸ்துக்களை மிகவும் ருசியுள்ளவை எனக்கொண்டாடுகிறார்கள். அது முற்றிலும் தவறென்றும் தம்மால் அநுபவிக்கப்பட்ட ராம நாமத்தின் சுவையையும் மற்றுமுள்ள வஸ்துக்களின் ருசியையும் சீர்தூக்கின் ஸ்ரீராமநாமத்தின் சுவையே மிகச்சிறந்ததென்கிற அனுபவத்தை உலகிலுள்ளோர்களுக்கு அறிவித்து சகல ஜனங்களும் அந்த நாமஸ்மரணத்தை அடிக்கடிசெய்து ஜன்மாவைப் பயன்பெறும்படி செய்யவேண்டுமாக அறிவிக்கிறார்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
குரோதன-ஸூ மாசி-மீ ௨௮வ

# ஸ்ரீ தப்ரபக்த சரிதம்.

## மஹாசிவராத்திரி புண்யகாலத்தில் அத்வைதஸபா பண்டிதரான பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபன்யாசத்தின் சுருக்கம்.

(௧௦௧-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதம் அரசனால் அறிவிக்கப்பட்டதைத்தாமும் அங்கீகரித்து அன்றுமுதல் மிகவும் சிறந்த நற்குணம்பொருந்திய தமது பத்னியுடன் ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான சிவனடியார்களுக்குப் போஜனமளித்து அவர்களின் ஆசியைப்பெற்றுக் காலம் கழித்துவந்தார். இவ்விதம் சிலகாலம் சென்றபின் அம்மஹானுக்குப் பூமியில் நிதிபோல் தர்மபத்னியிடத்தில் ஒருபுதல்வன் தோன்றினன். அக்குழவி திங்களைப்போல் சகல ஜனங்களுக்கும் நேத்திரானந்தத்தைக்கொடுத்தது. பலராலும் புகழ்பெற்ற அப்புத்திரனால் பிதாவும் பிதுர்ரிணத்திலிருந்தும் விடுபட்டு வேதியர்களுக்கு அதிகமான பொருளை அர்ப்பணம்செய்து சந்தோஷப்படுத்தினர். பிறகு தமது பந்து வர்க்கங்களுடன்கூடப் புதல்வனுக்கு ஜாதகர்மாவை விதிப்படி நடத்தி ஸ்ரீபதி என்கிற பொருளுடன்கூடிய நாமகரணத்தையும் செய்தார். பின்னும் முறையே அவ்வக்காலங்களில் செய்யவேண்டிய வைதிக ஸம்ஸ்காரங்களையும் விடாமல் நடத்திக் கல்வி கற்பதற்குரிய வயது வந்தவுடன் அக்ஷராப்பியாஸம் செய்துவைத்து அன்றுமுதல் பள்ளிக்கு அனுப்பிவந்தார். ஸ்ரீபதி என்கிற அப்பாலகனும் கிரமமாக எழுத்துக்களை எல்லாம் நன்கு உணர்ந்தான்.

இங்கு இவ்விதமிருக்க ஒரு சமயம் கைலாஸபர்வதத்தில் பார்வதிதேவியானவள் தமது பதியுடன்சேர்ந்து ஏகாந்தமாய் இருக்கும்பொழுது பர்த்தாவைநோக்கி "ஹே, பிரபோ! தங்களுக்கு நந்திமுதலியபல பக்தகோடிகளிருக்கின்றார்கள். அவர்களுக்குள் தங்களுக்கு யாரிடம் அதிகப்பிரியம் என்பதை உண்மையாகத் தெரிவிக்கவேண்டும்" என்று வினவுங்கால், மந்தஹாஸத்துடன்கூடிய பசுபதியானவர் "தப்ரபக்தரிடம் எனக்கு எவ்வளவு ப்ரீதி ஏற்பட்டிருக்கின்றதோ அவ்விதம் வேறு ஒருவரிடமும் இல்லை. ஹே சிவே! அவனது பக்திக்கு யோக்கியமான பலத்தைக் கொடுக்க நான் சக்தனல்ல" என்று கூறினர். உடனே பார்வதிதேவியால் "என்னிடத்தில்கூட அவ்விதப்ரீதி தங்களுக்கில்லையா" என்று வினவப்பட்ட சங்கரர் "அவனுடையபக்திக்கு முன் உன்பக்தி எவ்வளவு. அவனுடைய பக்தியின்வலிமையை அறிவிக்கிறேன் பார்" என்று தமது தேவியிடம் கூறினர்.

इत्युत्थितो बालशशाङ्कमौलिरापादकेशं धृतभस्मलेपः ।
समुन्नतोन्नद्धजटाकलापः सदभ्रभक्तं प्रति संप्रतस्थे ॥

இவ்விதம் தமதுபத்னியிடம் அறிவித்து, உடனே அவ்விடம்விட்டுக் கிளம்பினர். இளந்திங்களைச் சிரஸில் தரிப்பவரான அந்த மஹேசுவரன் கால்முதல் கேசம்வரையில் விபூதியைப் பூசிக்கொண்டு உயரத் தூக்கிக்கட்டப்பட்ட ஜடாமண்டலத்துடன் தப்ரபக்தனுடையகிரகத்துக்குப்போகப்புறப்பட்டார். இந்தஸமயம் தப்ரபக்தர் 'சித்திராபரணி-சித்திராநக்ஷத்திரத்துடன்கூடிய சித்திரை மாதத்துப் பௌர்ணமி-வரப்போகின்றது அது பரமேசுவரருக்கு மிகவும் பிரியமானதினம்' என்று அதிக ஆனந்தமடைந்து தமது பாரியாளை அழைத்து "மஹேசபக்தர்களுக்குப் பிரியமான பக்ஷ்யம் போஜ்யம்முதலானவைகளை நன்றாகநாளையதினம்செய்யவேண்டும் என்று கட்டளையிட்டார்.

பர்த்தாவின் ஆணையைச் சிரமேற்கொண்ட பதிவிருதாரத்னமான அம்மா தமது தினம் தமதுநாயகரிடம்சென்று "எவ்வளவுஜனங்களுக்குப் பாகம் செய்கிறது" என்று கேட்கும் காலத்தில் "இன்றைத்தினம் விசேஷ புண்ணியகாலம்; சூர்யனே ஆகாயமத்

தியத்திற்குவந்துவிட்டார்; இதுவரைசிவபக்தர்களில் ஒருவரையாவது காணோம்; வழக்கம்போல் நீ பாகம்செய்; நான் வெளியில் போய்த் தேடிப்பார்த்து யாரையாவது பிரார்த்தித்து அழைத்து வருகிறேன்; நான்வெளியில்போயிருக்கும் ஸமயத்தில் இங்கு யாராவது பக்தர்கள் வந்தால் அவர்களுக்கு வேண்டிய மரியாதை செய்து நமது கிருகத்திலேயே இருக்கும்படி செய்" என்று பாரியையிடம் சொல்லிவிட்டுச் சிவபக்தர்களைத் தேடவேண்டித் தாம் வெளியில்போய்விட்டார். அந்த ஸமயம் பதினைந்து நாழிகை ஆய்விட்டபடியால் சூரியன் தஹிக்கிறான்; பூமியின் மணல்கள் அதிக உஷ்ணமுள்ளவைகளா யிருப்பதால் கால் அடிவைப்பது மிகவும் சிரமமாயிருக்கிறது. இவ்வித சமயத்தில் பசுபதியானவர் சிவபக்தரென வேடம்பூண்டு இவருடைய வீட்டையடைந்து தாபத்தால் மிகுந்த சிரமத்தைப் பெற்றவர்போல் "யார் கிருஹத்தில்? இங்கு நான் வந்திருக்கிறேன்" என்று அறிவித்தார். இம்மொழியைச் செவியுற்ற பதிவிருதா சிரோமணியான அம்மாது அதிக ஸந்தோஷத்துடன் விரைவில் வெளிவந்து சிறந்த மஹேசுவர பக்தரைத் தர்சித்தாள். உடனே

**प्रणम्य दत्वासनमाह साञ्जलिस्सुखागतं भक्तवरेहचास्यताम् ।**
**आतिथ्यमत्रास्त्वनुमन्तुमर्हसीत्युक्त्वा वितेने विधिवत्तदर्चनम ॥**

அந்த சிவபக்தருக்கு வந்தனம் செய்து, ஆஸனம் ஸமர்ப்பித்து பக்திச் சிரத்தையுடன் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு "சிவபக்தர்களுக்குள் சிறந்தவரான ஹே ப்ரபோ! ஸுகமாக வந்தீரா. இதோ அருகிலிருக்கும் ஆஸனத்தில் தாங்கள் விஜயம் செய்ய வேண்டும். இன்று தங்களுக்குவேண்டிய அதிதி ஸத்காரத்தை இந்தக் கிரஹத்திலேயே கிரஹித்துக்கொள்ள வேண்டும். அவ்விதமே தாங்களும் அங்கீரிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்து அதிதிகளைப் பூஜிக்கவேண்டிய விதிப்படி அவரைப் பூஜித்தாள். அந்த ஸ்திரீயால் நன்கு அர்ச்சிக்கப்பட்ட கபடமாக வேடம் பூண்ட அந்த சங்கரர் "கிருகஸ்வாமி எங்கு வஸிக்கிறார்" என்று வந்தனம்செய்கின்ற அம்மாதை வினவினர். அந்தநாரியும் "மஹேச்வர பக்தர்களுடைய பாதஸேவகரான எனது நாதர் தங்களைப் போன்ற சிவனடியார்களைத் தேடிக்கொண்டு வெளியில் சென்றி

ருக்கிறார். சீக்கிரம் வந்துவிடுவார். தாங்கள் தயவுசெய்து இந்த ஆஸனத்தில் இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். எவ்வளவு வேண்டியும் "கிருகஸ்வாமி இல்லாத கிருகத்தில் வித்வான் இருப்பது உசிதமில்லை. எந்த இடத்தில் இருப்பது உசிதமோ அந்த இடத்துக்குப் போகிறேன்" என்று தேவாலயத்திற்குச் சென்றுவிட்டார். அம்மஹான் ஆலயம் சென்றவுடன் தப்பரபக்தர் பலவிடங்களிலும் தேடியும் ஒருவரையும் காணாமல் இன்றைத்தினம் இவ்விதம் நேர்ந்துவிட்டதே என்று மனவருத்தத்துடன் ஸ்ரீ பரமேசுவரனை ஸ்மரித்துக்கொண்டு தமது வீடுவந்து சேர்ந்தார். உடனே அவரிடம் பக்தியுடன் பத்னி நடந்த விஷயத்தைத்தெரிவித்து "அம்மஹான்சிவாலயத்தில்இருப்பதாகப்போயிருக்கிறார்" என்றும் "அங்குச் சென்று அப்பெரியாரைப் பிரார்த்தித்து அழைத்துவந்து போஜனம் செய்யும்படிசெய்யவேண்டும்" என்றும் அறிவித்தாள். தப்பரபக்தர் அமுதாஸத்துக்கு ஒப்பான இல்லாள்மொழியைப் பிரியமாகச் செவியுற்று பக்த வேஷதாரியாகிய ஸ்ரீ சந்திரசேகரரால் விளங்கும் தேவாலயத்தை அடைந்தார். (தொடரும்)

உபபத்திராதிபர்.

# குருபக்தியின் அவசியம்.

(கக௨-வதுபக்கத்தொடர்ச்சி.)

உபமன்யுவைப் பசுக்களை மேய்த்துவரும்படி குரு ஆக்ஞாபித்தார். குரு அவனுக்கு ஆகாரத்தைக் கொடுக்காதிருப்பினும் அவன் புஷ்டியாயிருப்பதுகண்டு அவர் அவனதுஜீவனோபாயத்தை வினவினார். அவன் 'பிக்ஷையினால் ஜீவிக்கிறேன்' என்றான். உபாத்தியாயர் "பிக்ஷையை எனக்குக்காண்பியாமல் உபயோகிக்காதே" என்றார். அவன் பிக்ஷையைக் காண்பிக்கவே அதைத்தான்வாங்கிக்கொண்டு விட்டார். அவன் வழக்கம்போல் பசுக்களை மேய்த்துக்கொண்டு புஷ்டியாயிருந்தான். அதையறிந்த குரு 'அப்பா! பிக்ஷையை நான் எடுத்துக்கொண்டுவிடுகிறேன். நீ எப்படி ஜீவனம் செய்கிறாய்?" எனக்கேட்டார். இரண்டாம்முறை பிக்ஷையெடுத்து உண்பதாக அவன் பதிலளித்தான்.

உடனே குரு 'அடே பிக்ஷையெடுத்து ஜீவிக்கும் மற்றவர்களின் ஜீவனத்தைக் கெடுக்கிறாய்' என்றார். அவன் சரி என்று தனது வேலையைப் பார்த்தான். இன்னும் புஷ்டியாயிருந்த அவனை குரு குழந்தாய், இப்போது எதனால் காலக்ஷேபம் செய்கிறாய் ? என்றார். அவன் ஐயா, இப்பசுக்களின் பாலைக்குடித்து ஜீவிக்கிறேன், என்றான். குரு பசுக்களை மேய்க்கத்தான்கட்டளையிட்டதாகவும் அவைகளின்பாலை உபயோகிக்க அநுமதிதரவில்லையெனவும் கூறவே 'அப்படியே ஆகட்டும் என்று சொல்லிவிட்டுப் போனான். மறுநாளும் அவன் புஷ்டியாயிருப்பதைக்கண்டு குரு அவனை வினவினார். அவன் "குருவே! கன்றுகள் பாலைக்குடித்து வாயின் வெளியில் ஒதுக்கின நுரையைக் குடித்து ஜீவிக்கிறேன் என்று பதில் சொன்னான்.

அதற்கு குரு நீ இக்கன்றுகளின் ஆகாரத்திற்கு இடையூறு செய்கிறாயே என்றார். அவனும் சரியென்று பசுக்களை ரக்ஷித்தான். இச்சமயம் யாதொன்றும் அவனுக்குக் கிடைக்காததால் பசியின் கொடுமையால் எருக்கிலைகளைத் தின்றான். அதனால் கண் பொட்டையாகி பசுக்களை ஓட்டிவருகையில் ஒரு பாழும் கிணற்றில் விழுந்துவிட்டான். அந்தி நேரத்திலும் வீடு வாராத சிஷ்யனைத் தேட உபாத்தியாயர் வனம் சென்று 'உபமன்யுவே எங்கிருக்கிறாய் ? என்று கூக்குரலிட்டார். அவன் மறுமொழியினால் கிணற்றில் விழுந்திருப்பதாக அறிந்து நடந்த செய்தியைக் கேட்டுத்தேவவைத்தியர்களான அசிவினீ தேவதைகளைத்துதிக்கும்படிக் கட்டளையிட்டார்.

அவனால் பலவாறாகத் துதிக்கப்பட்ட அசுவினி தேவர்கள் பிரத்யக்ஷமாகி ஒரு பக்ஷணத்தை அவனுக்குச் சாப்பிடக் கொடுத்தார்கள். உபமன்யுவோ குருவுக்குத் தெரியாமல் சாப்பிட முடியாதென்று சொன்னான். அவர்கள் 'குழந்தாய், முன்னொரு சமயம் உனது ஆசாரியருக்கு நாம் பக்ஷணத்தைக்கொடுத்தோம் அவர் தமது குருவுக்குத்தெரியாமலே புசித்துவிட்டார். அவரைபோலவே நீயும் செய் என்றார்கள். அப்படியும் அவன் கேழ்க்கவில்லை. பிறகு அத்தேவர்கள் அவனுடைய குருபக்திக்குமெச்சி அவன் கண்களைப் பெறுமாறும் அவன் பற்கள் பொன்னாகட்டும்,

என்றும் அநுக்கிரகித்தனர். உடனே உபமன்யு விடுசென்று குருவினிடம் நிகழ்ந்ததைக் கூறி அவருடைய அநுக்கிரகத்தால் ஒரு வித்வானானான்.

மூன்றாவது சிஷனான பைதனுக்கோவென்றால் எருதுகளைப் போல் சுமைசுமக்கும் வேலையை விதித்தார். அவன் வெகுகாலம் இதைப்போலொத்த மற்றப் பரீக்ஷைகளிலும் தேறி ஸர்வக்ஞனானான். இக்கதைகளினால் குரு உபதேசம செய்யாவிடினும் சிஷ்யன் மனனம் செய்யாவிடினும் அவர் அநுக்கிரகத்தினால் மாத்திரம் அனைவரும் பண்டிதர்களாயினர் என்றால் குருப்ரஸாதம் எவ்வளவு சிறந்தது பாருங்கள்! [பாரதம்]

சிஷனின் சிரவணாதி ரூபப்ரயத்னம் குருவின் அநுக்கிரஹத்திற்குச்சமானமானதுமல்ல. ஸத்யகாமர், கௌதமரை அணுக அவர் நானூறு பசுக்களை ஸத்யகாமனிடம் கொடுத்து ஆயிரம் பசுக்களாகச் செய்துகொண்டு திரும்பி வரும்படி கட்டளையிட்டார். வெகு காலத்திற்குப் பிறகு அவன் குருவினிடம் வரும் வழியில் வாயுபகவான் எருதின் உருவங்கொண்டும் அக்னிபகவான் தேவதையின் உருவங்கொண்டும், பிரஹ்மதேவர் ஹம்ஸரூபியாயும், வருணபகவான் நீர்க்காகத்தின் உருவங்கொண்டும் ஸத்யகாமனுக்கு பிரஹ்மஉபதேசம் செய்தனர். அவர்களின் உபதேசங்களைச் சிரவணம்செய்து குருவையடைந்தான். அவன் தேஜஸ்ஸை யறிந்த கௌதமர் உபதேசம்பெற்ற விதத்தை அறிந்து தேவதைகளின் சிஷ்யனுக்கு நாம் என்ன உபதேசிப்பது என்று ஆலோசித்தார்.

அப்போது ஸத்யகாமர், "குருவே! நான் தங்களைத்தான் ஆசாரியாக வரித்தேன். அந்த தேவர்களை வரிக்கவில்லை. குருமுகமாகப் பயிலும் வித்யையே மேலானதால் தாங்களே கிருபைகூர்ந்து அநுக்கிரஹம் புரியவேண்டும்" என்று வேண்டினர். குருவும் அதற்கிணங்கி உபதேசித்தருளினர். (சாந்தோக்கிய உபநிஷத் 4-ம் அத்தியாயம்) இதனால் நாம் அறிவதென்ன? சிரவணாதிகள் குருப்ரஸாதத்திற்குச் சமமாயின், ஸத்யகாமர் கௌதமரை மீண்டும் உபதேசிக்குமாறு ஏன் வேண்டவேண்டும்? கௌதமரும் ஏன் உபதேசிக்கவேண்டும்? ஆகையால் மற்றவர்களி

டமிருந்து சிரவணம் செய்திருந்தபோதிலும் அந்த வித்யை வீர்யமுள்ளதாக வேண்டுமாயின் குருவின் அநுக்கிரஹம் இன்றியமையாதது.

இதுபோலவே ஸமீபகாலத்தில் வியாஸராமாசாரியார் என்ற வித்வான் அநேக வாதிகளை ஜயித்தும் 'தரங்கிணீ' என்னும் அரிய நூலை இயற்றியும் இருந்தார். அவ்வித பாண்டித்யமிருந்தும் ஒரு சமயத்தில்ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளைத் தரிசிக்கச்சென்ற போது அவரிடம் உபதேசம் பெறக்கருதிப் பிரார்த்தித்தார். அவரும் அவ்வண்ணமே அநுக்கிரஹித்தனர். மேற்சொன்ன விஷயமே ஸ்ரீ வியாஸபகவானால்

ॐ लिङ्गभूयस्त्वात्तद्धि बलीयस्तदपि ॐ (3—3—45)

என்ற ஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வராஹ புராணத்திலும்,

गुरुप्रसादो बलवान्न तस्माद्बलवत्तरम् ।
तथापि श्रवणादिश्च कर्तव्यो मोक्षसिद्धये ॥

"குருவின் அநுக்கிரஹம் பலமானது. அதைவிடப் பிரபலமான தொன்றுமில்லை. ஆயினும் மோக்ஷமடையும் பொருட்டு சிரவணாதிகளைச் செய்யவேண்டியது" என்று கூறப்பட்டிருக்கிறது.

இனி குருப்ரஸாதம் அவசிய மென்பதற்குச் சில யுக்திகளையும் கூறுவோம்.

1. பகவானுக்குக் கோபம் உண்டான சமயத்தில் குரு அச்சிஷ்யன் விஷயமாகச் சிபார்சு செய்து காத்தருளும்படி செய்வார். குருவிற்குக் கோபம் ஏற்பட்டால் காப்பாற்றுகிறவர் ஒருவருமில்லை. ஆகையால் குருவின் பிரீதியைச் சம்பாதிப்பது அவசியம்.

2. பகவான் குருசுசுருஷை செய்பவனிடம் சந்தோஷமடைவதுபோல வேறு யாரிடத்திலும் அடைவதில்லை. ஸ்ரீ கிருஷ்ணபகவான் குசேலரிடம் கூறுவதாவது.

नाहमिज्याप्रजातिभ्यां तपसोपशमेन वा ।
तुष्येयं सर्वभूतात्मा गुरुशुश्रूषया यथा ॥

"அன்பனே ஸகலப்பிராணிகளின் அந்தர்யாமியாயிருக்கும் நான் ஆசார்யனுக்குச் சுச்ரூஷை செய்கிறவனிடத்தில் எப்படி சந்தோஷமடைகிறேனே அப்படி யாகம் செய்பவனிடத்திலும், உயர் குலத்திற் பிறந்தவனிடத்திலும், தபஸ்வியினிடமும், மனத்தை நிக்ரஹம் செய்தவனிடமும் சந்தோஷப்படுகிறதில்லை." ஆகவே குருவுக்குப் பணிவிடை செய்தால் ஈசுவரன் அதிக சந்தோஷமடைகிறான்.

गुरुशुश्रूषया विद्या पुष्कलेन धनेन वा ।
अथवा विद्यया विद्या चतुर्थं नोपलक्षये ॥

3. கல்வியைக் கற்கும் மார்க்கங்கள் மூன்றாகும். அவைகளில் முதலாவது குருசுச்ரூஷை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

4. குருபக்தியின் அவசியத்தை உலகத்தாருக்குத் தெரிவிக்க வேண்டி தேவர்களுக்குத் தேவனும் ஜகத்துக்கு குருவுமான ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸாந்தீபினி என்னும் ஆசாரியரிடம் கல்வியைக்கற்றுக் காட்டிற்குச் சென்று விறகு வெட்டிவருதல் முதலிபபல அரியபணிகளையும் தானே செய்துகாட்டியிருக்கிறார். இன்னும் மற்ற அவதாரங்களிலும் அவ்விதமே நடத்திக் காட்டியிருக்கிறார்.

5. ஏகலைவன் சரித்திரத்தைக்கேளாதார் யாவருமிலர். அச்சரித்திரத்திலிருந்து தெரியவருவதியாது? குருவைப்போலுள்ள ஒரு மண்பதுமையைப் பூஜித்துவந்த ஏகலைவன் ஸாக்ஷாத் குருவினிடமே அஸ்திரங்களைக் கற்ற அர்ஜுனனைவிடத் தேர்ச்சியடைந்தான். அவனை அர்ஜுனனுக்குச் சமமாகச் செய்வதற்கல்லவா துரோணர் அவன் வலக்கட்டை விரலை குருதக்ஷிணையாக வேண்டினார். கேவலம் குரு என்ற ஒரு மண்பதுமைக்கே அவ்வளவுசக்தியிருக்கக்குருவின்மஹிமையை நாம்எவ்வாறுஉரைப்பது.

सम्यग्लक्षणसम्पन्नो यद्यात्सुप्रसन्नधीः ।
शिष्याय सत्यं भवति तत्सर्वं नात्र संशयः ॥
नातिप्रसन्नहृदयः यद्यद्यादगुरुरप्यसौ ।
न तत्सत्यं भवेत्तस्मादर्चनीयो गुरुः सदा ॥

குருவானவர் மலர்ந்த முகத்தோடும் பிரியத்தோடும் சிஷ்யய னுக்கு உபதேசிப்பதெல்லாம் உண்மையாகப் பலிக்கின்றன. அவ்வாறல்லாது உபதேசிப்பது ஒருபோதும் உண்மையாகிற தில்லை. இவ்விஷயத்தில் சந்தேகமில்லை, ஆகையால் எப்போதும் குருவைப் பூஜிக்கவேண்டும்.

பாரதயுத்ததில் ஸிந்துராஜனான ஜயத்ரனைக் கொல்லும் சந் தர்ப்பத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்த்ரத் தை உபதேசிக்க பரமசிவனிடம் அவனை அழைத்துச் சென்றார். ஸகல அஸ்தரங்களையும் உபதேசிக்கவல்ல ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவ்வாறு செய்ததின் காரணம் என்ன ? அந்தந்த வித்யையின் குருவினுடைய உபதேசத்தால்தான் விசேஷ அனுக்கிரஹம் ஏற் படும் என்பதை ரூபிப்பதற்கல்லவா !

स्वयमेवाखिलजगद्रक्षाद्यमितशक्तिमान् ।
अप्यच्युतो गुरुद्वारा प्रसादकृदहंत्विति ॥
ज्ञापयन्फल्गुनस्यास्त्रगुरुं गिरिशमञ्जसा ॥

6. குருவினிடம் உபதேசம் பெற்றவனுக்கு வார்த்தைக ளின் பொருள் விளங்குவதுபோல் வேறுஎவர்க்கும் குருபதேசம் ஆகாவிடில் இன்னின்ன வாக்கியங்களை இன்னின்ன ஸந்தர்ப்பத் தில் உபயோகிக்கவேண்டுமென்று அறியாமல் தனக்குத் தோன் றியவாறு உபயோகித்து உலகத்தாரால் பரிஹஸிக்கப் படுவான் என்பதை நிரூபிக்க ஒரு சிறுகதையையும் சொல்வதுண்டு.

ஓர் ஊரில் எல்லா சாஸ்திரங்களையும் தானே கற்றுணர்ந்த வித்வான் ஒருவன் இருந்தான். ஒருநாள் அவன் தனது அழகிய மனைவியைப் பார்க்குங்கால் தான் ஏற்கனவே படித்த भार्या रूप' वती शत्रु: என்ற வாக்கியம் அவனுடைய ஞாபகத்திற்கு வந்தது, உடனே அவளுடைய அழகைக்குறைப்பதற்கு அவளுடைய ஒரு கண்ணைக் குத்திவிட்டான். பிறகு एकाक्षी कुलनाशिनी என்ற வாக் யத்தை ஸ்மரித்தான். மற்றொரு கண்ணையும் குத்திவிட்டான். அச்சமயத்தில் ஏதோ ஒரு காரணத்தால் அவன் வீடு தீக்கிரை யாக அந்த வித்வான் उष्णं उष्णेन शाम्यति என்ற நீதியைச்சொல்

விக்கொண்டு தானும் அக்னி பகவானுக்குத் துணையாக விருந்தான். அங்குள்ள அவனைவரும் இவன் ஒரு பித்தன்போலும் என்று அவனை அடித்துத் துரத்தினார்கள்.

இவ்வாறு துரத்தப்பட்டு அவன் ஓடும் வழியில் ஓர் உத்தியான வனத்தில் தனது மனைவியான அரசியின் மடியில் படுத்து நித்திரை புரியும் அத்தேசத்தரசனைக் கண்டான். தான் படித்த பாடங்களை ஸ்மரிக்கவே ஒரு வாக்கியம் அவனது மனத்திற் தோன்றிற்று. உடனே அவன் அவ்வரசியின் மற்றொரு மடியில் தானும் படுத்து நித்திரை செய்தான். தனது கணவனான அரசனுக்கு நித்திரை பங்கம் ஏற்படுமே என்ற பயத்தினால் அரசியும் மௌனமாக இருக்கவேண்டியிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் விழித்துக்கொண்ட அரசன் நடந்த செய்தியைத் தனது மனைவியினால் அறிந்து அப்பண்டிதனைக் கோபாவேசத்துடன் வினவினான். வித்வானும் 'அரசே' यथा राजा तथा प्रजाः ஒருமடியில் அரசன் தூங்கினால் மற்றொரு மடியில் பிரஜைகள் தூங்குவார்கள் எனக் கூறினான். அரசன் அவனைப்பித்தனென்று கருதி அவனுக்குத் தகுந்த தண்டனையை விதித்தான்.

गुरुत्यागे भवेन्मृत्युः मन्त्रत्यागे दरिद्रता ।
गुरुमन्त्रपरित्यागे रौरवं नरकं व्रजेत् ॥

"குருவை விட்டுவிட்டால் மரணம் நேரிடும். அவர் உபதேசிக்கும் மந்திரத்தை விட்டுவிட்டால்வறுமையுண்டாகும். குருவையும் மந்திரத்தையும் விட்டுவிட்டால் ரௌரவம் என்னும் நரகத்தை அடைவான்" என்று சாஸ்திரங்களில் அநேக பாதகங்கள் கூறப்பட்டிருக்கிறபடியால் குருவையும் அவர் உபதேசிக்கும் வார்த்தைகளையும் பகுமானம் செய்யவேண்டும். அபரோக்ஷஞானியும் குருபக்தி செய்யவேண்டும். அவர் குருசாபத்துக்கு ஆளானால் மோக்ஷஸுகத்தில் குறைவு ஏற்படும். அடியிற்கண்ட சுலோகத்தில் காண்க.

ज्ञानिनो गुरुशापेऽपि ..................... ।
आनन्दह्रासदोषेण सैव मुक्तिर्विदुष्यति ॥

10. கடைசியாக நம் அநுபவத்தையொட்டி ஒரு சிறு யுக்தியைக் கூறுவோம். தாத்காலிகமான அற்பஸௌகத்தைக் கொடுக்கும் தேள் மந்திரத்திற்கே ஒரு குரு அவசியம் என்பதும் அம்மந்திரத்தைக் கிரஹணம் முதலிய புண்யகாலங்களிலே பன்முறை ஜபித்தால்தான் பலிக்கும் என்பதும் யாவரும் அறிந்த விஷயம். அப்படியிருக்க மோக்ஷாதி ஸகல ஐஹிக ஆமுஷ்டிக பலன்களேயும் தாத்தக்க வேதாந்த வித்யைக்கு குருவும் அவரது அநுக்ரஹமும் இன்றியமையாதவை என்று சொல்லவும் வேண்டுமோ !

நீ தி க ள்.

1. குருவானவர் சிஷ்யனுக்கு உபதேசிக்கும்போது "சிஷ்யனே நம்மிடம் எந்த ஸதாசாரங்கள் உள்ளனவோ அவைகளைத்தான் நீ கையாளவேண்டும். மற்றவைகளை நீ கருதலாகாது" என்று சொல்வதாகத் தைத்திரீயசுருதியில் கூறப்பட்டிருக்கிறது, எனினும் குருசெய்வதையெல்லாம் சிஷ்யன் செய்வதற்கு முயற்சிக்கலாகாதென்று நிரூபிக்க ஒரு சிறு சரித்திரத்தை இங்கு வரைவாம்.

2. கர்ணன் முன்னொருகால் அஸ்திரங்களைக் கற்கத் துரோணசாரியரை அடைந்தான். துரோணர், அவன் † ஸூதஜாதியைச் சேர்ந்தவன் என்று அஸ்திரங்களை உபதேசிக்க மறுத்தார். கர்ணன் உடனே துரோணரின் குருவான பாசுராமரிடமேகற்கப் போனன். பாசுராமர் 'நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன் ?' என்று கேட்க 'ஐயா, நான் பிராமணன்' என்று பொய் சொன்னன். ஸர்வக்ஞரான பாசுராமரும் சில தேவகாரியங்களை முன்னிட்டு

---

† கர்ணன் குந்தியிடம் சூரியனுல் பிறந்தான். ஸூதனுல் வளர்க்கப்பட்டான். அவன் பிறப்பினுல் க்ஷத்திரியனுயிற்றே ? என்றால்

**अक्षत्रसंस्कारयुतो जातोऽपि क्षत्रिये कुले ।**
**न क्षत्रियो हि भवति तथा व्रात्यो द्विजोत्तमः ॥**

என்றபடி பிறப்புமாத்திரம் காரணமாகாது. அந்தந்த வர்ணத்துக்குரிய ஸம்ஸ்காரமும் அவசியம். கர்ணனுக்கு க்ஷத்திரிய ஸம்ஸ்காரம் செய்யப்படவில்லையாதலால் அவனை க்ஷத்திரியனல்லவென்றும் ஸூதஜாதியைச் சேர்ந்தவனென்றும் துரோணர் கருதினர்.

அவன் பொய் சொன்னபோதிலும் அஸ்திரங்களைக் கற்பித்து வருங்கால் ஒரு நாள் கர்ணனின் மடியின்மேல் படுத்துறங்கினர். அச்சமயத்தில் ஒரு புழு கர்ணனின் துடையைக் குடைந்து துவாரமாக்கிக்கொண்டே இருந்தது. இரக்தவெள்ளமும் பெருகிற்று. குருவுக்கு நித்திரை பங்கம் ஏற்படக்கூடாதென்று கருதிக் கர்ணன் அதைப் பொறுத்திருந்தான். (தொடரும்)

எம். ராமராவ்,
மாத்வ ஸபைக் கார்யதர்சி.

# பிராமணர்களே இன்னும் தூக்கமோ?

உலகத்தில் நான்கு முதல்வர்ணங்களும் பிற பலவர்ணங்களும் ஜனகோஷ்டியில் இருக்க பிராமணர்களை மட்டும் தூக்கமோ என்று வினவுவது ஏன்? உலகம் என்ன காரணம்பற்றி பிராமணர்களை தூஷித்தல் மூலியம் தட்டி எழுப்புகிறதோ அக்காரணத்தைக்கொண்டே யானும் ஈண்டு எழுப்பலுற்றேன். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்ரீ பகவத்கீதையில் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும் தர்மத்தை ஸ்தாபிப்பதற்கும் அவ்வவ்வமயத்தில் பூமியில் அவதரிப்பேன் என்றுரைத்தார். மனுஸ்மிருதியில் "பிறர் புகழ்ச்சியை வருத்தத்துடனும் பிறர் இகழ்ச்சியை ஸந்தோஷத்துடனும் ஏற்றுக்கொள்ளவேண்டும் பிராமணன்" என்று சொல்லப்படுகிறது. இவ்விருவசனங்களையும் கூட்டியோசிக்கையில் அடியேன் மனத்து உதிப்பதொன்றுண்டு. அதாவது பூஸுரர்கள் என்று உலக விசித்திரமான நாமம் பூண்டிருக்கும் பிருமணர்கள் இச்சமயம் பிற உலகத்தால் இகழப்படுவதை ஸந்தோஷமாக ஏற்றுக்கொண்டு தீவ்ரமாக தங்கள் துர்க்குண ஆசார எண்ணங்களைவிட்டொழித்துவிட்டு ஸர்வதர்மிஷ்டர்களாகவும் மஹாபுத்திமான்களாகவும் ஆகி தர்ம உலகத்தை அதர்மப் பெருக்கினின்றும் ரக்ஷித்து ஜனங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணப் பிரயத்தினப்படவேண்டும். ஒரு ஸாதாரணபுத்தியுள்ள ஐரோப்பியனைவிட, உலகத்தைநன்றாய் அறிந்த (மோக்ஷதர்மத்தைப் பற்றிக் கூறவில்லை.) ஒரு மேதாவிப்

பிராமணன் இல்லையென்றே அடியேன் தாழ்ந்த அபிப்பிராயம். இவ்விதம் தங்கள் எண்ணத்தை முடிக்க பிராமணர்கள் ஒரு ஸங்கமாகக்கூடவேண்டும். உலகக்ஷேமகரமான காரியங்களைச்செய்ய வேண்டும். ஐரோப்பிய வித்தியாகலா உலகின்கீழ் தங்கள் வித்யாகலா விஷயங்களில் தாழ்வை உணரவேண்டும். உலகத்திற்கு ஸர்வவித்தைகளிலும் கலைகளிலும் தாங்கள் பழையகாலம் ஆச்சார்யர்களாக இருந்ததை எண்ணவேண்டும். தாங்கள் மறுபடியும் முன்போல ஸர்வ விஷயங்களிலும் ஸர்வ லோகாசார்யத்வத்தை வகிக்க முன்வரவேண்டும்.

இவ்விஷயத்தைப் பற்றி யான் பல காலத்தும் பலவழிகளிலும் யோஜனை செய்ததுண்டு. பிறர் பல வழிகள் ஏற்படுத்தியதில் சேர்ந்ததுண்டு. தனியாக ஸபைகள் ஏற்படுத்தியதுண்டு. பல உபன்யாஸிகளுடன் ஸ்நேகித்து அவர்களுடைய வழிகளைக் கவனித்ததுண்டு. பல பிரசார பத்திரிகைகளில் பக்கம் பக்கமாய் எழுதியதுண்டு. அடியேன் எண்ணம்போல் நினைக்கும் மதாபிமானிகளும் பண்டிதர்களும் பல வழி நினைத்ததுண்டு. ஆனால் இப்பல வழிகளும் எண்ணங்களும் நசிக்கின்றனவேயொழிய பலன் அளிப்பதில்லை. கடைசியில் அடியேனும் பழக்கமுள்ள வித்வான்களுமாகச் சேர்ந்து தீவர யோஜனை பண்ணி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அதாவது ஒரு ரிஜிஸ்டரான லிமிடெட் கம்பெனி ஸ்தாபித்து பங்குகள் சேர்த்துப் பல விஷயங்களை நடத்துதல். இது பரம்பரையாய், சாச்வதமாய் நடந்துவரக்கூடியது என்று நம்புகிறோம். அப்படி ஏற்படும் சங்கம் அல்லது நிதியின் விபரம் இங்கே குறிக்கப்படுகிறது.

---

## ஸ்ரீ தர்மரக்ஷண நிதி.

---

1. இந்தநிதியின் பெயர் "ஸ்ரீ தர்மரக்ஷண நிதி"

2. இந்த நிதி கும்பகோணத்தில் தலைமை ஆபீஸையும் பிற இடங்களில் கிளைகள் ஏஜன்ஸிகள் முதலியவைவைத்து நடைபெறும்.

3. இந்த நிதி சென்னைராஜதானியில் வைத்து நடத்தப் படும்.

4. இந்த நிதியின் நோக்கங்களாவன:—

1. ஸர்வஜனங்களிடமிருந்தும் டிபாஸிட் மூலியம் பணம் பெறுதல். கடன் வாங்குதல். ஸகலருக்கும் கடன்கொடுத்தல்.

2. பஞ்ச உலோஹவேலை, நவதான்ய உற்பத்தி முதலிய பலகலைகளையும் நடத்தி கைத்தொழிலை விருத்தி செய்யல்.

3. அச்சுயந்திரம் பருத்தியந்திரம் முதலிய முக்கியயந்திரத் தொழிலைமட்டும் வைத்து விருத்திசெய்யல்.

4. வீதி வீதியாகவும் பொது சந்தைகளிலும் கடைகளிலும் பல ஊர்களிலும் சிறந்த ஸாமன்களைச் சேகரித்து உபயோகிக்கக்கூடிய விதமாகத் தயார்செய்து விற்பனை செய்தல்.

5. ஜனங்களின் தனத்தையும் தொழில் வர்த்தகத்தையும் க்ஷேமத்தையும் விருத்தி பண்ணக்கூடிய எவ்வித காரியத்தையும் செய்தல்.

6. நிதிக்கு வேண்டிய ஸ்தாவர ஜங்கம ஸொத்துக்களை கிரயம், போக்கியம், குத்தகை, வாடைக்கு வாங்கல் விற்றல் முதலியவை செய்தல்.

7. அனாதையான பாழ்த்த துர்விநியோகப் படுத்தப் படுகிற ஆலயங்கள் சத்திரங்கள் நீர்துறைக் கட்டிடங்கள் அன்ன சத்திரங்கள் தர்மபாடசாலைகள் முதலிய தர்ம பொது ஸ்தாபனங்களைக் கவனித்து கோர்ட்டில் வியாஜ்யம் மத்யஸ்தம் பிறவழிகள் மூலியம் வசப்படுத்திக் காப்பாற்றிப் பாதுகார்த்து அந்த உத்தேசங்களை நடத்தி வருதல்.

8. ஜனங்களின் சச்சரவு மனஸ்தாபங்கள் பணத்தகவல் நிலத்தகவல் முதலிய பல வித்யாஸங்களையும் பஞ்சாயத்து மூலியம் நிவர்த்தி செய்து ஜனஸமாதானம் உண்டு பண்ணல்.

9. தர்மாச்ரமம் ஸ்தாபித்து நடத்தல். ஆச்ரம நிர்மாணம்.

(1) குறிப்பட்ட வயதுவரையில் ஒப்படைக்கப்பட்ட பிரும்மசாரிகளை ரக்ஷித்தல். அவர்களை ஸந்தியாவந்தனம் பிக்ஷாடனம், ஸமிதாதானம் குருகுலவாஸம், முதலிய விரதங்களை அனுஷ்

டிக்கச் செய்தல். அவர்களுக்கு ஸர்வ வித்தைகளிலும் பரிசய மும் ஒரு முக்கிய வித்தையில் பாரங்கதத்வமும் பல கலைகளிலும் பயிற்சியும் ஒரு முக்கியகலையில்தேர்ச்சியுமுண்டுபண்ணிவைத்தல்.

(2)கலாஸபை. ஒவ்வொருகலையையும்பற்றி ஒவ்வொரு சபை ஏற்படுத்தி அதைப்பூர்ணமாய்ப் பலவித உபகரணங்களைக்கொண் டும் நிதியின் கலாஸ்தாபனங்களை உபயோகப்படுத்திக்கொண்டும் ஆராய்ச்சிசெய்து விருத்திசெய்தல்.

(3) புஸ்தகஸபை ஏற்படுத்தி பலவிஷயங்களைப்பற்றி கிரந்த ங்கள் எழுதி வெளியிடுதல். புஸ்தகாலயம் ஸ்தாபித்து சாதனங் கள் ஏற்படுத்தி நடத்திவருதல்.

(4) பிரசாரஸபை பத்திரிகைகளைக் கொண்டும் சாரர்களைக் கொண்டும் விஷயங்களை எங்கும் பரப்புதல்

(5) புறஸபைகள்—இதர வைதிக லௌகிக சம்பந்தமான ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒரு ஸபை ஏற்படுத்தி பல விஷயங்க ளையும் ஆராய்ச்சிசெய்து சோதித்து வெளியிடுதல்

(6) ஆச்ரமத்துக்கு வேண்டிய ஜங்கம ஸ்தாவரங்களை வாங் கல் விற்றல் முதலியவை செய்தல்.

10. மூலதனம ரூ. 20,000. பங்கு 1க்கு ரூ. 10 வீதம் 2000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பிறவிப்பிராமணர் களாலேயே பங்குகள் எடுத்துவைத்துக் கொள்ளப்படும்.

11. நிதியின் எல்லாவிஷயங்களும் இந்தியக்கம்பெனிச்சட் டத்தின்படி நடத்தப்படும்.

இதை பராமரிக்கவேண்டும்.

ஸாரம், ரங்காசாரியார்.

இவ்வித அபிப்பிராயத்தில் நோக்கங்கொண்டவர் எவரும் "ஸாரம், C/o ஆர்யதர்மம் பத்திராதிபர் கும்பகோணம்" என்று எழுதவும்.